மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 20 வியாழக்கிழமை 06.11.2025 கதிர் 362

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel


# நெடுந்தீவு பிரதேச தவிசாளர் உள்ளிட்ட அறுவர் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

நெடுந்தீவு, நவ. 06

நெடுந்தீவில் தொல்பொருள் சின்னத்துக்குச் சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை அமைந்துள்ள பகுதியில் வீதி அமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள தொல்பொருள் சின்னம் சேதப்படுத்தப்பட்டது எனது தெரிவித்து தொல்லியல் திணைக்களத்தால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, அந்தப் பணியில் ஈடுபட்ட இரண்டு பேர் நெடுந்தீவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டு இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்ததாரர் உள்ளிட்ட நான்கு பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு இன்று கைது செய்யப்பட்டனர்.

கைதான நான்கு பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் 7➤

# வித்தியா கொலை வழக்கு: மரணதண்டனைக் கைதிகள் விடுவிக்கப்படுவார்களா?

## பிரதிவாதிகளின் மேன்முறையீட்டு மனு விசாரணை நிறைவு தீர்ப்புக் காலவரையறையின்றி உயர்நீதிமன்றால் ஒத்திவைப்பு



**கொழும்பு, நவ. 06**

**யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளி நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பிரதிவாதிகள், தம்மைத் தண்டனையிலிருந்து விடுவிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நிறைவடைந்துள்ளது. இந்நிலையில், இம்மனு மீதான விசாரணையை நிறைவு செய்த உயர்நீதிமன்றம் தீர்ப்பைக் காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளது.**

**பிரதிவாதிகளின் மேன்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை இன்று உயர்நீதிமன்றத்தில் நிறைவு செய்யப்பட்டது.**

**பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்ற அமர்விலேயே இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, தீர்ப்பை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

*2015 ஆம் ஆண்டு யாழ். புங்குடுதீவுப் பகுதியில் பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தக் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.*

*யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் அப்போதைய நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் கொண்ட குழாம் இந்த மரணதண்டனைத் தீர்ப்பை அறிவித்திருந்தது.*


# இலங்கையில் நிலவும் மருந்துப் பற்றாக்குறைக்கு தீர்வு காண இந்தியாவின் உதவியை நாடிய சஜித்



புதுடில்லி, நவ. 06

இலங்கை மருத்துவத் துறையில் நிலவும் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறைக்குத் தீர்வு காண இந்திய அரசின் ஆதரவை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவைச் சந்தித்து கோரிக்கை விடுத்தார். 7➤

# குளவி கொட்டி எழுவர் பாதிப்பு



நுவரெலியா, நவ. 06

நுவரெலியா, இறம்பொடை, வெதமுல்லை தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் எழுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் 11 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஆண் தொழிலாளர்கள் 7➤

# வரவு - செலவுத் திட்டம் நாளை முன்வைப்பு

கொழும்பு, நவ. 06

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளின் இறுதி வரைவைப் பரிசீலிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று இரவு ஜனாதிபதி செயலகத்தில் இணைந்துகொண்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

தற்போதைய அரசின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



# சஜித் பிரேமதாச இந்திய உலக விவகார கவுன்சிலில் சிறப்புரை




கொழும்பு, நவ.6

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, புது டில்லியில் உள்ள உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலில் சிறப்புரை நிகழ்த்தினார்.

உலகளாவிய இராஜதந்திர நடவடிக்கைகளில் இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் பரிணாமம் கண்டு வரும் பங்களிப்பைப் பாராட்டிய சஜித் பிரேமதாச, இந்தியாவை "வியூக சுயாட்சியின் மற்றும் தென்-தென் ஒத்துழைப்பின் கலங்கரை விளக்கம் என்று வர்ணித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான நாகரிக மற்றும் ஜனநாயக உறவுகளை எதிர்க்கட்சித்தலைவர் மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தினார்.

இந்தியப் பெருங்கடலை அமைதி மற்றும் ஒத்துழைப்புக்கான வலயமாக பாதுகாப்பதற்கான கூட்டுப் பொறுப்பையும் அவர் வலியுறுத்தினார்.

பூகோளப் பொருளாதாரத்தின் எழுச்சி மற்றும் வர்த்தகம், பாதுகாப்பு முன்னுரிமைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் கட்டமைப்பு மாற்றத்தை எட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாகரிக மற்றும் தொழில்நுட்ப சக்தியாக இந்தியா உருவெடுப்பதைச் சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாச, அதன் டிஜிட்டல் ஜனநாயகம், தயாரிப்புகள் மற்றும் நம்பகமான உலகளாவிய கூட்டாண்மைகளைப் போஷிப்பதில் கண்டு வரும் வெற்றிகள் தொடர்பிலும் பாராட்டு தெரிவித்தார். குறிப்பாக, மின்சார வாகனங்கள் மற்றும் விநியோக சேவைத் துறைகளில் இந்தியாவின் தொழில் மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகளுடன் இணைவதற்கான இலங்கையின் விருப்பத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நியாயமான மற்றும் சமநிலையானதொரு உலகளாவிய ஒழுங்கை வடிவமைக்க, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் நிரந்தர உறுப்புரிமை இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தியாவுக்கு காணப்படும் இயலுமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் தனது நம்பிக்கையை வெளிப்படுத் தினார். (ஐ)

# ஐ.நா பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்: சஜித் ஆதரவு



கொழும்பு, நவ.6

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினராக இடம் கோரும் நீண்ட கால முயற்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது "உலகளாவிய அதிகார யதார்த்தங்களை" அங்கீகரிப்பதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த முயற்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பேன் என்றும் கூறியுள்ளார்.

தற்போது இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவர், ஏஎன்ஐ (யுஜே) செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா இணைவது "சர்வதேச அரசியலின் நடைமுறை யதார்த்தங்களை அங்கீகரிப்பதாக" இருக்கும் என்று தெரிவித்தார்.

"பல ஆண்டுகளுக்கு முன்பே, ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்கப்பட வேண்டும் என்று வெளிப்படையாகப் பேசியவன் நான் தான். எனவே, இது எனக்குப் பழைமையான ஒரு தலைப்பு," என்று அவர் கூறினார்.

"நான் தொடர்ந்து அந்த முயற்சிக்கு ஆதரவளிப்பேன். அது உலகளாவிய அதிகார யதார்த்தங்களின் ஒரு நடைமுறைக் காட்சியாகும் என்று நான் நினைக்கிறேன். இந்தியாவை உங்களால் புறக்கணிக்க முடியாது. இந்தியாவை உங்களால் ஒதுக்கி வைக்க முடியாது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவின் பிரதிநிதித்துவம் என்பது சர்வதேச அரசியலின் நடைமுறை யதார்த்தங்களை அங்கீகரிப்பதாக இருக்கும்." என்றார். (ஐ)



# 2025ம் ஆண்டுக்கான பாதீட்டில் எத்தனை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன? – சம்பிக்க கேள்வி

கொழும்பு, நவ.6

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை விடயங்கள் செயற்படுத்தப்பட்ட என்பதை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2025 ஆம் ஆண்டு அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என்று அரசாங்கம் குறிப்பிடுவதை தர்க்க ரீதியில் ஆராய வேண்டும். சகல துறைகளிலும் வரிகளை அதிகரித்து விட்டு அதன் ஊடாகவே அரச வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



ஆட்சிக்கு வந்தவுடன் சுகாதாரம் மற்றும் கல்வி, பாடசாலை உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வற் வரியை முழுமையாக இரத்துச் செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. ஆனால் இந்த விடயம் மறக்கப்பட்டுள்ளது. 2027 மற்றும் 2028 ஆண்டுகளில் சொத்து வரியை அமுல்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்து செயற்திட்டங்களை பரிந்துரைத்துள்ளது. சொத்து வரிக்கு அமைவாகவே இலங்கையின் பொருளாதார சுட்டெண்ணை சர்வதேச நாணய நிதியம் தயாரித்துள்ளது.

2027 மற்றும் 2028 ஆம் ஆண்டளவில் சொத்து வரி அமுல்படுத்தப்படுமா என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையின் போது நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும்.

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை விடயங்கள் செயற்படுத்தப்பட்ட என்பதையும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும் என்றார். (ஐ)

# திடீரென பற்றி எரிந்த தீப்பெட்டி தொழிற்சாலை



கொழும்பு, நவ.6

கண்டி பல்லேகலையில் உள்ள தீப்பெட்டி தொழிற்சாலை ஒன்றில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் நேற்று இரவு திடீரென தீ பரவி தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்ததில் அந்தப் பகுதி முழுவதும் பரபரப்பான சூழல் உருவாகியது.

பற்றி எரிந்த தீயைக் கட்டுப்படுத்த கண்டி தீயணைப்புப் படையின் 3 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தில் உயிர் சேதங்கள் ஏதேனும் ஏற்பட்டிருப்பதாக தகவல் வெளியாகவில்லை. எனினும் தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்துள்ளதால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்க முடிகின்றது.

தீவிபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)



# விசேட பொலிஸ் சோதனையில் ஒரேநாளில் 980 பேர் கைது!

கொழும்பு, நவ.6

போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கில் நேற்று (05) நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட சோதனைகளில் மொத்தம் 980 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, நாடு முழுவதும் நேற்று நடத்தப்பட்ட மொத்தம் 1,053 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாகச் சம்பாதித்த சொத்துக்கள் குறித்து ஒன்பது நபர்களுக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் 19 பேருக்கு எதிராக மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக, நடவடிக்கையின் போது அடையாளம் காணப்பட்ட நான்கு போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மறுவாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய சோதனைகளின் போது 3 கிலோ கிராம் 321 கிராம் ஹெரோயின், 1 கிலோ கிராம் 107 கிராம் கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன் ('ஐஸ்'), 54 கிலோ கிராம் 434 கிராம் கஞ்சா மற்றும் 11 கிலோ கிராம் 325 கிராம் 'ஹாஷிஷ்' ஆகியவற்றையும் அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்(ஐ)

# அரச பேருந்து இல்லாமல் பாடசாலை மாணவர்கள் அவதி!

*மஸ்கெலியா மறே, சாமி மலை கொழும்பு ஆகிய பிரதான அரச பேருந்து சேவைகள் கடந்த சில நாட்களாக சேவையில் இல்லை . இதனால்பாடசாலை மாணவர்கள்பெரும்அவதியில்காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*நாளாந்தம் அதிகாலை வேளையில் ஹட்டன் நகரில் இருந்து அஞ்சல் பொதிகள் மற்றும் அரச தனியார் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயணிகளை ஏற்றிக் கொண்டு முதல் சேவையாக டிக்கோயா கிளங்கன் நோர்வூட் மஸ்கெலியா சாமிமலை சென்று மீண்டும் சாமி மலையில் இருந்து தலைநகர் கொழுப்பு நோக்கி செல்லும் பேருந்தும், மஸ்கெலியா மறே பேருந்து சேவை கடந்த பல நாள்களாக சேவையில் இல்லை இந்த சேவை நாளாந்தம் மறே மஸ்கெலியா மறே ஹட்டன் மற்றும் மேலதிக சேவைகள் ஐந்து இடம் பெற்று வந்த சேவைகள் தற்போது இடம் பெறுவது இல்லை.*

*இதன் காரணமாக இப் பகுதிக்கு செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்க பட்டு வருகின்றனர்.குறிப்பாக முன் கூட்டியே பணம்செலுத்தி பெற்று கொண்ட பருவகால சீட்டினை வைத்து கொண்டு தனியார் பேருந்துகளில் பணம் செலுத்தி பயன்மிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என புகார் தெரிவித்தனர்.*

*சம்பந்தப்பட்ட ஹட்டன் அரச பேருந்து நிலைய அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நிறுத்தப்பட்ட சேவைகள் ஆரம்பிக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)*



# உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி!

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் கல்லூரியில் யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை குறித்த பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.

யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி மூலம் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு துறையினரால் யோகா மற்றும் மூச்சு பயிற்சிகள் செய்து காண்பிக்கப்பட்டன.

இதில் விரிவுரையாளர் கேதீஸ்வரன் மற்றும் மாணவர்கள், யாழ்.நீரிழிவுக் கழக அங்கத்தினர் கலந்துகொண்டனர். அத்துடன் ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் ஆர்வத்துடன் பயிற்சியில் ஈடுபட்டனர். (ஐ)

# தலைமை பொறுப்புக்கு தகுதியில்லாதவர் எடப்பாடி பழனிசாமி: டிடிவி தினகரன் கடும் விமர்சனம்



தலைமை பொறுப்புக்கு சற்றும் தகுதி இல்லாத நபர் எடப்பாடி பழனிசாமி என டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னை அடை யாறில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பழனிசாமி தலை மையிலான கூட்டணி நிச்சயம் தேர்தலில் வெல்லாது. தேர்தலில் பழனிசாமிக்கு 3ஆவது இடம்தான் கிடைக்கும். பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக்கினால் வெற்றிபெற முடியாது என கிஷன் ரெட்டியிடம் கடிதம் அளித்தேன். தலைமை பொறுப்புக்கு சற்றும் தகுதி இல்லாத நபர் எடப்பாடி பழனிசாமி. தன்னை விமர்சித்தவர்களை கூட கட்சியில் சேர்த்து அரவணைத்தார் ஜெயலலிதா. ஆர்.எம். வீரப்பன், பா.வளர்மதி ஆகியோர் ஜெயலலிதாவுக்கு எதிராக பேசியவர்கள்தான். பழனிசாமியின் மீதுள்ள அதிருப்தியால் அதிமுகவில் இருந்து நிர்வாகிகள் வெளியேறுகின்றனர் எடப்பாடி என்ற துரோக சக்தி 2026 தேர்தலில் வீழ்த்தப்படும் என்று கூறினார். தொடர்ந்து பேசிய அவர் தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஒத்திவைக்க வேண்டும். சட்டப்பேரவை தேர்தலுக்கு பிறகு எஸ்.ஐ.ஆர் பணிகளை தமிழகத்தில் தொடரலாம். எஸ்.ஐ.ஆர் விண்ணப்பத்தில் கேட்கப்படும் கேள்விகளில் எனக்கே குழப்பம் வருகிறது.

சாமானிய மக்களுக்கு எஸ்ஐஆர் படிவத்தை பூர்த்தி செய்வதில் சிரமம் ஏற்படும். சிறப்பு தீவிர திருத்த படிவத்தில் பல்வேறு குளறுபடிகள் இருப்பதால் தள்ளிப்போட வேண்டும் என்று கூறினார். கூட்டணிக்கு தவெக அழைத்ததா என்ற கேள்விக்கு அதெல்லாம் சொல்ல முடியாது என பதில் அளித்தார்.

கூட்டணிக்காக அமமுகவுடன் பல கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்துகின்றன என்று கூறினார். (ஐ)

# சென்னையில் போதைப் பொருள் கும்பலைச் சேர்ந்த 8 பேர் கைது





சென்னை மண்ணடியில் போதைப் பொருள் விற்பனை கும்பலைச் சேர்ந்த 2 பெண்கள் உட்பட 8 பேரையும் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர்களிடம் இருந்து 22 கிராம் மெத்தம்பெட்டமைன் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மண்ணடி பகுதியில் போதைப் பொருள் விற்பனை நடைபெறுவதாக போதைப் பொருள் நுண்ணறிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில் போலீசார் தீவிரமாக கண்காணித்து ஒரு நபர் தொடர்பு கொண்டு வாடிக்கையாளர் போல் நடித்து முகமது சாலிக் என்பவரை முதலில் கைது செய்தனர். அவர் குடுத்த தகவலின் பெயரில் ஏழுகினரை சேர்ந்த அசரப்பலி அதேபோல் ராயபுரத்தை சேர்ந்த பிரபல போதைப்பொருள் பெண் வியாபாரி லைலா பதானியா அவரது மகள் சாமினா மற்றும் சாமினாவின் காதலன் முகமது யாசின் உட்பட மொத்தம் 8 பேரை போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசார் கைது செய்தனர்.

இவர்கள் வீடுகளிலும் போதை பொருள் விற்பனை நடத்தப்பட்டுள்ளது. சென்னை முழுவதும் பெரிய நெட்ஒர்க் அமைத்து கல்வி நிலையங்கள், அருகில் உள்ள பகுதிகள் என தனியார் நட்சத்திர விடுதிகளில் நாடாகும் பார்ட்டிகள் மற்றும் கல்லூ ரி மாணவர்கள், இளைஞர்களை குறிவைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. இவர்கள் 8 பேரை மீதும் வழக்கு பதிவு செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். (ஐ)



## அரசியலில் சில தவறுகளை செய்துள்ளேன் நான் செய்த தவறுகளில் ஒன்று அன்புமணியை ஒன்றிய அமைச்சராக்கியது: ராமதாஸ் பேட்டி

நான் செய்த தவறுகளில் ஒன்று அன்புமணியை ஒன்றிய அமைச்சராக்கியது என தைலாபுரம் இல்லத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் பேட்டி அளித்து வருகிறார். அன்புமணி தலைமையில் ஒரு கும்பல் செயல்பட்டு வருகிறது. அரசியலில் சில தவறுகளை நான் செய்ததுண்டு. நான் செய்த தவறுகளில் ஒன்று அன்புமணியை ஒன்றிய அமைச்சராக்கியது. மற்றொரு தவறு அன்புமணிக்கு கட்சித் தலைவர் பதவியை கொடுத்தது. பாமகவில் ஒரு பிளவு ஏற்பட்டுள்ளதாக மற்றவர்கள் நினைக்கும் அளவுக்கு அன்புமணியின் பேச்சும் செயல்பாடும் அமைந்துள்ளது என தெரிவித்தார். அன்புமணியின் பேச்சும் செயலும் அருவருக்கத்தக்கதாக உள்ளது. அன்புமணி கும்பல் பற்றி சொன்னால் வளர்ப்பு சரியில்லை என்பீர்கள் என தெரிவித்தார். (ஐ)



## ‘சுதந்திர போராட்டம் நடத்தும் நிலையில் பெண்கள் உள்ளனர்’

தமிழக பா.ஜ., மூத்த தலைவர் தமிழிசை நேற்று அளித்த பேட்டி:

சுதந்திர காற்றை சுவாசிப்பதற்கு, வந்தே மாதரம் பாடல்களும், சுதந்திரத்துக்காக நடந்த போராட்டங்கள் தான் காரணம்.

தமிழகத்தில் பெண், தோழனுடன் இருந்தாலும், பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார். தமிழகத்தில் சுதந்திர போராட்டத்தை நடத்த வேண்டிய நிலையில் பெண்கள் உள்ளனர். குஜராத், உ.பி., - ம.பி.,யில் பாலியல் வன்கொடுமை நடந்திருந்தால், ஸ்டாலின், கனிமொழி, வைகோ, திருமாவளவன், கம்யூனிஸ்ட் தலைவர்கள், உடனே கண்டனம் தெரிவித்திருப்பர்.

அவர்கள், தமிழகத்தில் ஒரு பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டால், கருத்து தெரிவிக்க மாட்டார்கள். போராட்டமும் நடத்த மாட்டார்கள். கஞ்சா விற்பவர், ‘குடி’மகன்கள் தான், தமிழகத்தில் சுதந்திரமாக நடந்து செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# வரும் தேர்தலில் முதல்வர் வேட்பாளர் ‘நான் தான்!’ : விஜய் சொன்ன தகவல்

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள சட்டசபை தேர்தலில், ‘நான் தான் முதல்வர் வேட்பாளர்’ என, கட்சி பொதுக்குழு தீர்மானம் வாயிலாக த.வெ.க., தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இதனால், த.வெ.க., தங்கள் கூட்டணிக்கு வரும் என காத்திருந்த அ.தி.மு.க.,வினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. இதில் களமிறங்க, தமிழக வெற்றிக் கழகம் கட்சியை, நடிகர் விஜய் தயார்படுத்தி வருகிறார். சினிமாவிற்கு முழுக்கு போட்டு, தேர்தல் பிரசாரப் பணிகளை செப்டம்பர் மாதம் திருச்சியில் விஜய் துவக்கினார். அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பிரசாரப் பேருந்தில் சுற்றுப்பயணம் செய்தார். அதே மாதம் 27ம் தேதி நாமக்கல்லில் பிரசாரத்தை முடித்துவிட்டு, கரூர் பிரசாரத்தில் பங்கேற்றார். அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில், 41 பேர் பலியாகினர். இந்த சம்பவம் தொடர்பாக, த.வெ.க., மாவட்டச் செயலர், மாநில நிர்வாகிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

விஜய் மீது எந்த வழக்கும் பதிவாகாத நிலையில், அவர் வீட்டிலேயே முடங்கினார். இதனால், த.வெ.க., செயல்பாடுகள் ஒரு மாதமாக தடைபட்டன.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அக்கட்சியை கூட்டணிக்கு இழுக்கும் வேலைகளை அ.தி.மு.க., தலைமை துவக்கியது. அக்கட்சியின் பொதுச்செயலர் பழனிசாமி பங்கேற்ற பிரசாரக் கூட்டத்தில், த.வெ.க., கொடிகளுடன் அக்கட்சித் தொண்டர்கள் தலை காட்டினர். அப்போது பேசிய பழனிசாமி, ‘கொடி பறக்கிறது பாருங்க... கூட்டணிக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டு விட்டது’ என கூறி தொண்டர்களை உற்சாகப்படுத்தினார். அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்களும், ‘அ.தி.மு.க., கூட்டணிக்கு த.வெ.க., வந்தால் நல்லது தி.மு.க., மீண்டும் ஆட்சிக்கு வந்தால், த.வெ.க.,வை விடமாட்டார்கள்’ என கருத்து தெரிவித்தனர். இரு தரப்பிலும் கூட்டணி பேச்சு நடப்பதாக தகவல் வெளியானது.

அ.தி.மு.க., தொண்டர்கள் மட்டுமின்றி, நிர்வாகிகளும், த.வெ.க., தங்கள் கூட்டணிக்கு வரும் தேர்தலில் எளிதாக வெற்றி பெற்று விடலாம் என நம் பிக்கையோடு காத்திருந்தனர்.

இந்நிலையில், வரும் சட்டசபை தேர்தலில், ‘நான் தான் முதல்வர் வேட்பாளர்’ என, த.வெ.க., தலைவர் விஜய் அறிவித்துள்ளார். அக்கட்சி சிறப்பு பொதுக்குழு கூட்டம், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று நடந்தது. இக்கூட்டத்தில், 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், கடைசி தீர்மானமாக, ‘முதல்வர் வேட்பாளர் விஜய் தலைமையில், 2026 சட்டசபை தேர்தலை சந்திக்க வேண்டும். கூட்டணி தொடர்பாக முடிவெடுக்கும் முழு அதிகாரமும் விஜய்க்கு வழங்கப்பட்டுள்ளது’ என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பேசிய அக்கட்சி பொதுச்செயலர் ஆனந்த், “மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை கொடுக்கும் தகுதி கொண்ட ஒரே கட்சி த.வெ.க., மட்டும் தான். வரும் சட்டசபை தேர்தலில் விஜயை முதல்வராக அமர வைக்க, த.வெ.க.,வினர் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்,” என்றார்.

விஜய் முதல்வர் வேட்பாளர் என்பதை அ.தி.மு.க., ஏற்காது. எனவே, த.வெ.க.,வுடன் கூட்டணி என்ற அ.தி.மு.க.,வினரின் கனவு சிதைந்துள்ளது. (ஐ)



# பெண் குழந்தைகளின் உண்மை நிலை என்ன ?

சமீபத்தில் சென்னை மருத்துவக் கல்லூரியின் மருத்துவர்கள் செய்த ஆய்வின் விவரம் செய்தித்தாளில் வந்துள்ளது. அதன் சாரம் இது தான் , சென்னை அரசுப் பள்ளிக் குழந்தைகளில் 5மூ மாணவிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்கள். தங்கள் வீடுகளில், பக்கத்து வீடுகளில், உறவினர் வீடுகளில் என அவர்களின் நெருங்கிய உறவுகள், நண்பர்களாலேயே தங்களுக்குப் பாலியல் ரீதியான துன்புறுத்தல் நிகழ்ந்துள்ளதாக அந்த ஆய்வில் கூறியுள்ளனர். குறிப்பாக 9 முதல் 11 வகுப்புகள் வரை பயிலும் 300 மாணவிகளை இந்த ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகிறது செய்தி. கலந்துகொண்ட மாணவிகளில் 78மூ பேர் தாங்கள் உடல் ரீதியாகப் பாதிக்கப்படுவதாகப் புகார் தெரிவித்துள்ளனர். 44மூ மாணவிகள் பாலியல் ரீதியாகத் பாதிக்கப்பட்டுள்ளதைக் கூறியுள்ளனர். 18மூ குழந்தைகள் உடல் ரீதியான துன்புறுத்தல்களும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுமாக இரு வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

வீட்டின் அறைக்குள் வைத்துப் பூட்டப்படுதல் (7மூ), உதைத்தல் (32மூ), அறைதல் (82மூ ), கீழே தள்ளுதல் (14மூ) எனப் பொதுவான, உடல் ரீதியாகத் துன்புறுத்தல்கள் குறித்துத் தெரிவித்துள்ளனர். இவர்களில் 25மூ மாணவிகளின் பதில், மாதத்திற்கு ஒரு முறையாவது தங்களுக்கு இது போன்று நடந்துவிடுகிறது என்பதே. பெரும்பாலும் தந்தை, தாய், சகோதரர், அத்தை, மாமா, உறவினர்களால் உடல் ரீதியான துன்புறுத்தல்களைச் சந்திப்பதாகக் கூறியுள்ளனர்.

பாலியல் ரீதியாகப் பாதிக்கப்படும் மாணவிகள் அடிக்கடி அந்தப் பிரச்னையைச் சந்திப்பதாகக் கூறியுள்ளனர். தங்கள் தந்தை, உடன் பிறந்தவர்கள், சகோதரர்களின் நண்பர்கள், பக்கத்து வீடுகளில் வாழ்பவர்கள், உறவினர்கள் என இவர்களே பெரும்பாலும் பாலியல் சீண்டல்களுக்குக் காரணமாக இருக்கின்றனர். மிகக் குறைந்த சதவீதம் புதியவர்களால் ஏற்படுகிறது என்பதும் அறியப்பட்டது.

94% குழந்தைகள் தங்கள் மீதான இப்படிப்பட்ட வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வுடன்தான் இருக்கின்றனர். ஆனால், இது பற்றி வெளியே சொல்வதைத் தவிர்த்துவிடுவதாகவும் இந்த ஆய்வு கூறுகிறது. காரணம் இதை மூன்றாம் நபரிடம் சொல்வதால் விளைவுகள் ஏதும் நிகழ்வதில்லை. ஆகவே நாங்கள் வெளிப்படுத்துவதில்லை என்று கூறியுள்ளனர். மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய இடம் இது.

இந்த ஆய்வின் முடிவுகளை நாம் எளிதாகக் கடந்துவிட முடியாது. ஒரே ஒரு பள்ளியில் படிக்கக்கூடிய 300 குழந்தைகளை எடுத்து ஆய்வு செய்யும்போது, இத்தனை பிரச்னைகள் வெளிவருகின்றன. பெண் குழந்தைகள் என்றாலே இதுபோன்ற பிரச்னைகளுக்கு ஆளாகின்றனர். இந்தச் சமூகம் முழுமையுமே பெண் குழந்தைகள் மீதான வன்முறையை இயக்குவதாகக் கட்டமைக்கப்பட்டு இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியிலும் படிக்கக்கூடிய குழந்தைகளிடம் இது போன்ற ஆய்வுகளை மேற்கொண்டால், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பெண் குழந்தைகள், இந்தச் சமூகத்தில் படும் துயரங்களும் ஒடுக்குமுறைகளும் நமக்கு நன்கு அறிய வரும். கல்வியால் நாம் உயர்ந்து நிற்கிறோம், பெண் கல்வியில் நாம் முன்னோக்கி வளர்கிறோம் என்று உரக்கக் குரல் கொடுக்கிறோம். ஆனால், அந்தக் கல்வி தரக்கூடிய அறிவுதான் என்ன?

வகுப்பறைகளிலும் இந்தச் சமூகத்திலும் பெண் குழந்தைகள் நடத்தப்படும் பாங்கு குறித்து நாம் வெளிப்படையாகப் பேசுவது ஏன் தவிர்க்கப்படுகிறது? இது ஒரு பிரச்னையாகப் பார்க்கப்படுவதும் இல்லை. இதுபோன்ற பிரச்னைகளின் நீட்சிதான் பெண் குழந்தைகளது அடுத்தடுத்த நகர்வுகள், திருமண உறவில் வன்முறை, குடும்ப வன்முறை என அனைத்திற்கும் காரணமாக அமைகிறது.

பெரும்பாலும் பெண் குழந்தைகள் பாலியல் ரீதியான சிக்கல்களுக்கு ஆளாகின்றனர் என்றால் அதன் அடிப்படை வீட்டிலிருந்தே தொடங்குகிறது. உடல் ரீதியான துன்புறுத்தல், மன ரீதியான துன்புறுத்தல், பாலியல் வன்முறைகள் என அனைத்து வகையிலும் வீடுகளிலிருந்தே தொடங்குகின்றன. காலம் காலமாக இந்த ஒடுக்குமுறைகள் தங்களுக்கு நிகழ்வதும் இதற்கான தீர்வுகள் கிடைக்காததும் பெண்களை விரக்தி மனநிலைக்கு அழைத்துச் செல்கின்றன.

யாரிடம் சொல்லி என்ன பிரயோஜனம் என்ற மனநிலையால் தங்களுக்குள்ளேயே புதைத்துக்கொண்டு வாழும் மனோபாவம் பெற்றுவிடுகின்றனர்.

பெண் குழந்தைகள் பள்ளியில் படித்தாலும் சரி, கல்லூரியில் படித்தாலும் சரி, எந்த வயதிலும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களது குரல்வளைகள் நெறிக்கப்படுவது போலவே இருப்பதால் தங்களுக்கான பிரச்னைகளை வெளியில் பேச மறுக்கின்றனர்.



இவற்றையெல்லாம் கடந்துதான் ஒரு பெண்குழந்தை இந்தச் சமூகத்தில் அதன் பாதையை அமைத்துக்கொள்கிறது. ஓரிடத்தில் வந்து தன்னை நிரூபித்துக்கொள்கிறது. ஒரு வேலையிலோ அல்லது ஒரு துறையிலோ சிறந்த பெண்ணாகத் தன்னை வளர்த்துக்கொள்ள, மிகப்பெரிய போராட்டத்தைச் சந்தித்த பிறகுதான் இயலுகிறது.

எனில் அதற்கான நம்பிக்கையும் மன உறுதியையும் வாழ்வியல் திறன்களையும் தரக்கூடிய கல்விமுறை நம்மிடம் இருக்கின்றனவா? அதை நாம் திரும்பத் திரும்ப ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய சூழலில் இருக்கின்றோம்.

பெண் குழந்தைகள் பாதுகாப்பு என்று எழுதிய கட்டுரையின் ஒரு தொடர்ச்சியாகவே இதை நாம் பார்க்கலாம். பெண் குழந்தைகளுக்கு இங்கு தொடர்ந்து பாதுகாப்பு மறுக்கப்பட்டு வருகின்றது. மறைமுகமாகவும் நேரடியாகவும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நிராகரிக்கப்படுகிறது. அது எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்றால் வீடுகளிலிருந்து, (7ஆம் பக்கம் பார்க்க...)

# அமெரிக்காவுக்கு பதிலடியாக ரஷ்யாவும் அணு ஆயுத சோதனைகளை நடத்தும்: புடின் எச்சரிக்கை



அமெரிக்காவுக்கு பதிலடியாக ரஷ்யாவும் அணு ஆயுத சோதனைகளை நடத்தும் என புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார். எந்த நாட்டிடமும் இல்லாத வகையில் அணுசக்தியில் இயங்கும் புரேவெஸ்ட்னிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்ததாக புதின் கடந்த மாதம் 26-ஆம் தேதி அறிவித்தார். அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லக் கூடிய அந்த ஏவுகணை, எத்தனை ஆயிரம் கி.மீ. வரையும் சென்று இலக்குகளைத் தாக்கும் வரம்பற்ற திறனைக் கொண்டது. அதனைத் தொடர்ந்து, வரம்பற்ற தொலைவுக்குப் பயணிக்கும், அணுசக்தியில் இயங்கக்கூடிய பொசைடன் நீர்மூழ்கி ட்ரோனை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்ததாக புதின் அக். 29-ஆம் தேதி அறிவித்தார்.

இந்த சோதனைகள் மூலம் அணு ஆயுதப் போட்டியில் அமெரிக்காவை ரஷ்யா வெகுவாக முந்திவிட்டதாகக் கூறப்பட்டது. இந்த நிலையில்தான் ரஷ்ய, அமெரிக்க சோதனைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அணு ஆயுத சோதனைகளை நடத்த உத்தரவிட்டுள்ளதாக டிரம்ப் அறிவித்தார். அணு ஆயுத சோதனைகளை மீண்டும் தொடங்கும் திட்டத்தை அறிவித்த அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு புடின் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக, தாங்களும் அணு ஆயுத சோதனைகளை நடத்துவதற்கு ஆயத்தமாகும் வகையில், அதற்கான செயல்திட்டங்களை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு புதின் தற்போது உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து மாஸ்கோவில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பேசிய புதின் நிறுத்திவைக்கப்பட்ட அணு ஆயுத சோதனைகளை மறுபடியும் நடத்தும் எண்ணம் ரஷ்யாவுக்கு இல்லை. ஆனால், அமெரிக்கா அத்தகைய சோதனையில் ஈடுபட்டால் ரஷ்யாவும் அந்த நடவடிக்கையில் இறங்கும். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் அண்மைக்கால உத்தரவையடுத்து, அந்த நாடு மீண்டும் அணு ஆயுத வெடிப்பு சோதனைகளை நடத்தவிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள உளவு அமைப்புகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். மேலும், அணு ஆயுத சோதனைகளை மீண்டும் நடத்துவதற்கு ஆயத்தமாகும் வகையில் அதற்கான செயல்திட்டங்களை உருவாக்கி சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்று கூறினார். (ஐ)

## அமெரிக்காவில் சரக்கு விமானம் விழுந்து நொறுங்கி 7 பேர் பலி: 11 பேர் காயம்



அமெரிக்காவில் யுபிஎஸ் சரக்கு விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விழுந்து நொறுங்கியதில் 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 11 பேர் காயமடைந்தனர். அமெரிக்காவின் கென்டக்கி மாகாணத்தில் உள்ள லூயிஸ்வில் முஹம்மது அலி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, ஹவாய் மாகாணத்தின் ஹொனலூலு நகருக்கு யுபிஎஸ் நிறுவனத்தின் சரக்கு விமானம் ஒன்று நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி மாலை 5.15 மணியளவில் புறப்பட்டது.

மெக்டொனால் டக்ளஸ் எம்.டி-11எஃப் ரக அந்த விமானத்தில் மூன்று விமான ஊழியர்கள் இருந்தனர். விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கட்டுப்பாட்டை இழந்து, விமான நிலையத்தின் அருகே இருந்த வாகன உதிரி பாகம் தயாரிக்கும் ஆலை உள்ளிட்டவை இருந்த பகுதியில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானம் தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 3 பேரும் உயிரிழந்தனர்.

மேலும் தரையில் நின்றிருந்த 11 பேர் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த பயங்கர விபத்தைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு சுமார் 200க்கும் மேற்பட்ட அவசரக்கால மீட்புப் படையினர் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். விபத்து காரணமாக லூயிஸ்வில் விமான நிலையம் இரவு முழுவதும் மூடப்பட்டது. பின்னர் நேற்று காலை மீண்டும் விமான சேவைகளை தொடங்கியது.

மேலும் அந்த பகுதியில் பணியில் இருந்த சிலரை காண வில்லை என்றும் கூறப்படுகின்றது. தொடர்ந்து மீட்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ)



## மெக்சிகோ அழகியை முட்டாள் என விமர்சித்ததால் மிஸ் யூனிவர்ஸ் போட்டியை புறக்கணித்த அழகிகள்

*மிஸ்யூனிவர்ஸ் 2025ஆம் ஆண்டுக்கான அழகி போட்டி தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடக்கிறது. இதில் அனைத்து நாடுகளையும் சேர்ந்த அழகிகள் பங்கேற்று உள்ளனர். ஒவ்வொரு கட்டமாக போட்டி நடந்து வருகிறது. அப்போது மிஸ் மெக்சிகோ நாட்டு அழகி படிமா போஷ் என்பவரை அழகி போட்டி நடத்தும் தாய்லாந்து நிர்வாகி நவத் இட்சராகிரிசில் திடீரென முட்டாள் என்று அழைத்தார். மேலும் இது நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதால், அதிருப்தி அடைந்த மெக்சிகோ அழகி படிமா போஷ் கோபம் அடைந்தார். யார் முட்டாள் என்று கேட்டு வாக்குவாதம் செய்தார்.*

*மேலும்,' நீங்கள் என்னை ஒரு பெண்ணாகவும், என் நாட்டின் பிரதிநிதியாகவும் மதிக்கவில்லை' என்று கூறி போட்டி அரங்கில் இருந்து வெளிநடப்பு செய்தார். அவருக்கு ஆதரவாக தற்போதைய மிஸ் யூனிவர்ஸ் விக்டோரியா கேஜேர் தெயில்விக் உட்பட அனைத்து போட்டியாளர்களும் எழுந்து வெளிநடப்பு செய்ததால் நிலைமை மோசமடைந்தது. இதை தொடர்ந்து போட்டி நிர்வாகி இட்சராகிரிசில் பகிரங்க மன்னிப்பு கோரினார். இதையடுத்து நின்று போன மிஸ்யூனிவர்ஸ் போட்டியை மீண்டும் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(ஐ)*

## பெல்ஜியத்தில் மர்ம ட்ரோன்கள் அட்டகாசம்: தலைநகரில் விமான நிலையம் திடீர் மூடல்

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் விமான நிலையம் அருகே மர்ம ட்ரோன்கள் பறந்ததால், விமானப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பெல்ஜியம் நாட்டில் சமீப காலமாக முக்கிய இடங்களில் மர்ம ட்ரோன்கள் பறப்பது தொடர் கதையாகி வருகிறது. கடந்த வார இறுதியில் கிளெய்ன்-புரோகல் ராணுவ விமானப்படை தளம் அருகே ட்ரோன்கள் காணப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், தலைநகர் பிரஸ்ஸல்ஸ் விமான நிலைய வான்பரப்பில் நேற்று (நவ. 4) இரவு 8 மணியளவில் மர்ம ட்ரோன்கள் பறப்பதாக விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, பயணிகளின் பாதுகாப்பு கருதி, விமான நிலையத்தில் இருந்து புறப்படும் மற்றும் தரையிறங்கும் அனைத்து விமான சேவைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டன. சுமார் 30 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் சேவை தொடங்கிய நிலையில், மீண்டும் ட்ரோன்கள் தென்பட்டதால் விமான நிலையம் மீண்டும் மூடப்பட்டது. இந்த ட்ரோன் அச்சுறுத்தல் பிரஸ்ஸல்ஸ் விமான நிலையத்துடன் நிற்கவில்லை.

பெல்ஜியத்தின் இரண்டாவது பெரிய விமான நிலையமான சார்லராய் மற்றும் சரக்கு விமானப் போக்குவரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த லீஜ் விமான நிலையங்களிலும் ட்ரோன்கள் தென்பட்டதால், அங்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. இதனால், பல விமானங்கள் மாஸ்ட்ரிக்ட், ஐந்தோவன், ஒஸ்டென்ட் போன்ற அருகிலுள்ள பிற விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டன. இந்த தொடர் ட்ரோன் சம்பவங்கள் குறித்து பெல்ஜிய ராணுவ உளவுத்துறை உள்ளிட்ட அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)



## குளவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐவரும், பெண் தொழிலா ளர்கள் இருவருமே குளவிக கொட்டுக்கு இலக்காகிய நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் இன்னுமொரு நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய சுகாதார கட்டமைப்பினூடாக பல தசாப்த காலமாக இலவச சுகாதார வசதிகள் வழங்கப்பட்ட போதிலும், தற்போது அத்தியாவசிய மற்றும் உயிர் காக்கும் பல மருந்துகளின் பற்றாக்குறை, அவற்றைப் பயன்படுத்தும் இலட்சக்கணக்கான மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது என்று சஜித் பிரேமதாஸ என்று சுட்டிக்காட்டினார்.

ஒரு சில மருந்துகள் தனியார் துறையினூடாக மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரச மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் அந்தச் சவாலை வெற்றிகொள்வதற்காக இலங்கைக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குமாறும், இந்தியா வழங்கும் அந்த ஒத்துழைப்பை மரியாதையுடன் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையின் சுகாதாரத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு கடந்த காலத்தில் வழங்கிய பங்களிப்பையிட்டும் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்தார்.

குறிப்பாக, 2016 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ஆரம்பிக்கப்பட்ட '1990 - சுவ செரிய' அம்புலன்ஸ் சேவையை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், அந்தச் சேவையை அறிமுகம் செய்ததினூடாக நாடு முழுவதும் அவசர மருத்துவ பதிலளிப்பு கட்டமைப்பு வலுவடைந்ததாகவும், அது "உயிர் காக்கும் கூட்டாண்மை" என விவரிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவது, ஔடத ஒத்துழைப்பை விரிவுப்படுத்துவது மற்றும் அனைவருக்கும் அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் மற்றும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டா ஆகியோர் விரிவாகக் கலந்துரையாடினர்.

## நெடுந்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை தமிழ் மன்னனின் வரலாற்றுடன்தொடர்புடையது எனத்தெரிவிக்கப்படுகின்றது. எனினும், சில வருடங்களுக்கு முன்பு அந்தப் பகுதி பௌத்த வரலாற்றுடன் தொடர்புடையது எனக் கடற்படையினரால் பதாகை போடப்பட்டு சர்ச்சை எழுந்த நிலையில் அந்தப் பதாகை நீக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கெஹலிய ரம்புக்வெல்ல வழக்கு தொடர்பில் நீதிமன்றம் புதிய உத்தரவு

*அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு தரமற்ற இம்யூனோகுளோப்லின் தடுப்பூசிகளை சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவுக்குக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில், விசாரணைக்கு முந்தைய மாநாட்டை நவம்பர் மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்குமாறு கொழும்பு நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இன்று (06) உத்தரவிட்டது.*

*முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட 12 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையாகும். இவ்வழக்கு இன்று நீதிபதிகள் பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலக ரத்னபண்டார ஆகியோரைக் கொண்ட மூவர் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*இன்று காலை 8.30 மணியளவில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வழக்கில் இரண்டாம் பிரதிவாதியான கபில விக்ரமநாயக்க சார்பில் ஆஜரான சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஏகநாயக்க, தனது கட்சிக்காரர் இன்று காலை நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பரீட்சை ஒன்றுக்குச் செல்ல அனுமதி கோரிய நிலையில், நீதிபதிகள் குழாம் அந்த வேண்டுகோளுக்கு அனுமதி வழங்கியது.*

## வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி கண்டியில் இன்று சடலமாக மீட்பு!

கண்டி, நவ. 06

கண்டிப் பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை விடுதி ஒன்றில் இருந்து வெளிநாட்டு பெண் சுற்றுலாப் பயணி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கண்டி அருப்பொல, தர்மசோக்கா மாவத்தையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இறந்து கிடந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் சுற்றுலா விசாவின் மூலம் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவைச் சேர்ந்த கெய்ட்லின் ஜூலி கிளார்க் (வயது 55) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் மூன்று மாதங்களாக வாடகை வீட்டில் தங்கி வருகின்றார். இவர் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிகிரியாவுக்குச் சுற்றுலா சென்று வீடு திரும்பியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக கண்டி தேசிய வைத்தியசாலையின் பிணவறைக்குச் சடலம் அனுப்பப்பட்டுள்ளது. கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலை சட்டத்துறை மாணவர்களால் கடற்கரையில் சிரமதானம்!

*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை மாணவர் சங்கத்தின் 20வது ஆண்டு விழாவானது சாட்டி கடற்கரையில் சுத்தம் செய்வது மூலம் கொண்டாடப்பட்டது.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை மாணவர் சங்கம் தனது 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 2025 நவம்பர் 5 ஆம் தேதி யாழ்ப்பாண சாட்டி கடற்கரையில் சிறப்பு கடற்கரை சுத்தம் செய்யும் திட்டத்தை ஏற்பாடு செய்தது.*

*இந்நிகழ்வு கடலோரச் சூழலின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் சமூக பொறுப்புணர்வை மேம்படுத்தும் சட்ட மாணவர்களின் பங்களிப்பையும் வலியுறுத்தியது.*

# தேசிய தொழுநோய் மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு

நாட்டிலிருந்து தொழுநோயை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட 'தேசிய தொழுநோய் மாநாடு' ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது

அடுத்த 10 ஆண்டுகளில் இலங்கையில் இருந்து தொழுநோயை ஒழிப்பதற்கான வரைபடமும் வெளியிடப்பட்டது

நாட்டிலிருந்து தொழுநோயை ஒழிப்பதற்கான பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கும் வகையில், தேசிய தொழுநோய் மாநாடு இன்று (06) காலை கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் ஆரம்பமானதோடு அதன் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கலந்து கொண்டார்.

அடுத்த 10 ஆண்டுகளில் இலங்கையில் இருந்து தொழுநோயை ஒழிப்பதற்கான வரைபடம் இதன்போது வெளியிடப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனம் (றுஉழு) மற்றும் சசகாவா மன்றம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் சுகாதார அமைச்சின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய தொழுநோய் மாநாடு இன்றும் (06) நாளையும் (07) கொழும்பில் நடைபெறும்.

நிகழ்வில் உரையாற்றிய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் இலங்கை1995 ஆம் ஆண்டில் தொழுநோயை ஒழித்த போதிலும்அந்தப்பயணம்இன்னும் நிறைவடையவில்லை.

தொடர்ந்தும் புதிய நோயாளிகள் அடையாளங் காணப்படுகின்றனர். அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1500-2000 புதிய தொழுநோயாளிகள் அடையாளம் காணப்படுவதாகவும் அவர்களில் சுமார் 10மூ பேர் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி, 2035 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை தொழுநோய் அற்ற நாடாக மாற்ற தற்போதைய அரசாங்கம் திட்டமிட்ட வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நோய் பரவுவதற்கு காரணமான நோயாளிகளை முன்கூட்டியே கண்டறிதல், வைத்தியசாலை கட்டமைப்பால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை மற்றும் வசதிகளை மேம்படுத்துதல், அங்கவீனமுற்றவர்களுக்கான முறையான புனர்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழுநோய் பரவலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகளை இந்த மாநாடு மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டிலிருந்து தொழுநோயை ஒழிப்பதில் பல ஆண்டுகளாக சுகாதார அமைச்சிற்கு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் சசகாவா மன்றம் என்பவற்றுக்கு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதேவேளை, புதிதாக அடையாளங்காணப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் சுமார் 40மூ மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். அதிக எண்ணிக்கையிலான தொழுநோயாளிகள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதோடு முறையே மட்டக்களப்பு, கம்பஹா, குருநாகல் மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தும் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக இதன்போது அறிவிக்கப்பட்டது.

நிப்பொன் மன்றத்தின் தலைவரும் தொழுநோய் ஒழிப்புக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் நல்லெண்ணத் தூதுவர் மற்றும் தொழுநோய் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளுக்கான ஜப்பானிய அரசாங்க நல்லெண்ணத் தூதுவர் யோஹெய் சசகாவாவும் (லுழாநை ளுயளயமயறய) இந்த மாநாட்டில் முக்கிய உரையை நிகழ்த்தினார்.

சுகாதார மற்றும்வெகுஜன ஊடக அமைச்சின்செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்கே மற்றும் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் யசோமா வீரசேகர ஆகியோரும் இங்கு கருத்துத் தெரிவித்தனர். தொழுநோயாளிகள் சார்பாகவும் அஜித் திசாநாயக்க உரையாற்றினார்.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதிஅமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி, ஜப்பானிய தூதுவர் அகியோ இசொமாடா(யுமழை ஐளுழுஆயுவுயு), உலக சுகாதார ஸ்தாபனத்தின் உலகளாவிய தொழுநோய் திட்டத்தின் குழுத் தலைவர் மொமோ தகுயுச்சி(ஆழஅழந வுயமநரஉாை), உலக சுகாதார ஸ்தாபனத்தின் உலகளாவிய தொழுநோய் திட்டக் குழுத் தலைவர் வைத்தியர் விவேக் லால் உள்ளிட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் உள்நாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் சுகாதார அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.(ஐ)

# பெண் குழந்தைகளின்.....

சமூகத்தில் இருந்து ஆரம்பிக்கிறது எனில், நாம் திரும்பக் கேட்பது பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு எங்கே? அவர்களுடைய பிரச்னைகளை அவர்கள் எங்கு சொல்லித் தீர்வு காண்பார்கள்? அரசு எடுக்கக்கூடிய முயற்சிகளும் தாமரை இலை தண்ணீர் போலவே இருப்பதால் தான் இன்று பல பெண் குழந்தைகளுக்கு மரணம் நிகழ்கிறது. பள்ளியும் பாதுகாப்பு இல்லை, வீடும் பாதுகாப்பில்லை. சமூகமும் பாதுகாப்பு இல்லை. இந்தச் சூழல் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் நீடிக்கும்? பெண்கள் சார்ந்து இயங்கக் கூடிய அமைப்புகளும் பெண்ணியச் செயல்பாட்டாளர்களும் சற்றுக் கவனத்தில்கொள்ள வேண்டிய விஷயம் இது.

போக்சோ இருந்தும் பயன் என்ன? 14417 பெண் குழந்தைகளால் அழைக்கப்பட்டால் தமிழ்நாடு தாங்குமா? குழந்தைகளுக்கான பாதுகாப்பு அமைப்புகள் முழு வீச்சில் இயங்குகின்றனவா? இப்படிப் பல கேள்விகள் இருந்தாலும் நடைமுறை சாத்தியக்கூறுகளை நோக்கி நகர வேண்டும் .

அதற்கான தீர்வு, பள்ளிக் கல்வி முறையில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. பெண் குழந்தைகளிடையே அவர்களை இந்தச் சமூகம் நடத்தும் விதம், அவர்களுக்கான உடல் ரீதியான துன்புறுத்தல்கள், பாலியல் சீண்டல்கள் குறித்து தைரியமாக வெளிப்படுத்த வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். ஆகவே இப்படியான வாய்ப்புகளை உருவாக்கும் களங்களாக வகுப்பறைகள் மாற வேண்டும். பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்கு விதை போடும் இடமே பள்ளியாக இருக்க முடியும். அப்படியான பாதுகாப்பு என்பது வேலை வாய்ப்புகள் மட்டுமல்ல, அதற்கான கல்வி அறிவு மட்டுமல்ல. சுய மரியாதை, தற்காப்பு, தன்னை உணர்தல், தனக்கு இழைக்கப்படும் அநீதியைக் கேள்விக்குட்படுத்துவது என இவற்றை உள்ளடக்கியக் கல்வி தரப் பட வேண்டும். எனில், முதலில் அவர்களுக்கான பிரச்னைகளை உரையாட, விவரிக்க வாய்ப்புகள் உருவாக்குவதும் இணைந்தது தான் கல்வி முறை. அரசும் பெற்றோரும் கல்விச் செயல்பாட்டாளர்களும் இவற்றை கவனத்தில்கொள்ள வேண்டும்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய
பயிர்ச்செய்கையும்
பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!